★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 10உ புதன் (25—7—56) ★ ★ வெளியீடு: ஆடி 11உ வியாழன் (26—7—56) [இதழ் 35

பெண்களுக்குத் தடை உத்தரவு!

புதுடில்லி, ஜூலை 24—

ஏற்கனவே ஒரு மனைவியை உயிரோடு வைத்துக் கொண்டிருக்கும் ஒருவரை, இரயில்வே இலாகாவில் பணி புரியும் பெண் ஊழியர்கள் கணவனாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும், ஏற்றுக்கொள்வதற்கு இலாகாவின் முன் அனுமதி பெறவேண்டுமென்றும் இரயில்வே இலாகாவினர் தடை உத்தரவு ஒன்று பிறப்பித்திருக்கின்றனர் எனத் தெரிகிறது.

'எட்டாண்டுகளாகியும் நாடு முன்னேறவில்லை'

'மக்கள் வறுமை தொலைக்கப்படுமுன் சுயராஜ்யம் வெறும் கற்பனையே'

'காந்தியாரும் அவர்கோட்பாடுகளும் மறுக்கப்பட்டு விட்டன'

காளா வெங்கிடராவ் சோகம்

இந்துப்பூர், ஜூலை 23—

"காந்தியாரும், அவரது போதனைகளும் மறுக்கப்பட்டு விட்டன.

"மக்களின் வறுமை ஒழிக்கப்பட்டால் அல்லாது, உண்மையான சுயராஜ்யம் என்பது வெறும் மனோபிராந்தியாகத்தான் இருக்கமுடியும்,

"சுதந்திரம் கிடைத்து எட்டாண்டுகள் ஆனபோதிலும், இருந்துதீர வேண்டிய அளவிற்கு, நாட்டின் முன்னேற்றம் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை."

இவ்வாறு, ஆந்திர காங்கிரஸ் அமைச்சர் காளா வெங்கிடராவ் தேசிய இளைஞர் படை முகாமில் பேசும் பொழுது குறிப்பிட்டுள்ளார்.

நம்மளுடைய தேவைகளுக்காக அமெரிக்காவையோ மற்ற வெளிநாடுகளையோ எதிர்பார்த்துக் கொண்டு இருக்கக்கூடாது என்றும் அவர் அறிவித்தார்.

எஸ். வி. லிங்கம் உடல் நலம்

திருச்சி, ஜூலை 25—

தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள், அரசாங்க மருத்துவமனையில் இரண்யா அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர், இன்று இல்லம் திரும்பினர்.

அண்ணா அவர்களும், தோழர்கள் அ. பொன்னம்பலனார், இராசாராம் ஆகியவர்கள், தோழர் எஸ். வி. லிங்கம் அவர்களைச் சந்தித்து, உடல் நலம் விசாரித்துச் சென்றனர்.

'அவர் எழுந்து நடமாடுவதற்கு இன்னும் இரண்டு வாரமாகும்' என்று அவருக்கு இப்போது சிகிச்சை செய்துவரும் டாக்டர் பொன்னுவேல் அவர்கள் தெரிவித்துள்ளார்.

'இலங்கைப் படுகொலை' சுவரொட்டிகள்!

காமராசர் கண்ணில் படாதிருக்க களவாடப்பட்டனவாம்!

எட்டயபுரம், ஜூலை 24—

இலங்கைத் தமிழர் படுகொலை குறித்து நமது கழகம் வெளியிட்ட சுவரொட்டிகளை, எட்டயபுரம் தி மு. கழகத் தோழர்கள் தட்டியில் ஒட்டி, ஊரின் முக்கிய இடங்களில் வைத்திருந்தனர்.

கடந்த 20-ந் தேதி காலை காமராசர் இங்கு வந்தபோது, அந்தத் தட்டிகள் அவர் கண்ணில் படாமலிருக்க வேண்டுமென யாரோ சிலர், (காங்கிரசாராகத்தான் இருக்கவேண்டுமென சந்தேகிக்கப்படுகிறது) அந்தச் சுவரொட்டிகள் இருந்த தட்டிகளைத் திருடிக்கொண்டு போய்விட்டனராம்.

இந்த போக்கிரித்தனம் குறித்து, கழகத் தோழர்கள் உள்ளூர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்திருக்கின்றனர்.

பாவம்! சுவரொட்டிகளைத் திருடிக்கொண்டு போன அவர்கள், 'சீப்பை ஒளித்துவிட்டால் கல்யாணமே நடைபெறாது' என எண்ணுகின்ற அப்பாவிகள் போலும்! (ச. தி.)

முடிவை மாற்றிக்கொள்ள முடியாதாம்

தி. மு. க. பற்றிய விவரங்களை அறிந்தும் தேர்தலில் தனிச் சின்னம் தர மறுப்பு

தலைமை நிலைய தூதுக் குழுவிற்கு தேர்தல் அதிகாரி பதில்

சென்னை, ஜூலை 25—

அடுத்து நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் கலந்துகொள்வது என்ற முடிவுக்கேற்ப, தேர்தலில் தி. மு. கழகத்திற்குத் தனிச்சின்னம் தரப்பட வேண்டுமென்று டில்லியிலுள்ள பிரதம தேர்தல் அதிகாரி சுகுமார் சென் அவர்களை, சென்னை மாநிலத் தேர்தல் அதிகாரியின் மூலமாய், தி. மு. கழகத் தலைமை நிலைபம் கடிதம் மூலம் கேட்டிருந்தது.

சென்ற பொதுத் தேர்தலில் கலந்துகொண்ட கட்சிகளுக்கு-அதிலும், பதிவான மொத்த வாக்குகளில் மூன்று சதவிகிதம் பெற்ற கட்சிகளுக்கு மட்டுமே தனிச்சின்னம் வழங்கப்படுமென்றும், இதற்கான அத்தாட்சிகளைத் தரும் கட்சிகளுக்கே தனிச்சின்னம் வழங்கப்படுமென்றும் பிரதம தேர்தல் அதிகாரியின் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே, பிரதம தேர்தல் அதிகாரியை நேரில் கண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலையை விளக்கித் தனிச் சின்னம் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு விவாதிக்க 21—7—56 இரவு சென்னையிலிருந்து தி. மு. கழகத் துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன், திராவிட பார்லிமெண்டரி கட்சிச் செயலாளர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., எஸ். வேதரத்தினம் எம். ஏ., ஆகியோர் பெங்களூர் புறப்பட்டுச் சென்றனர்.

தேர்தல் அதிகாரிகள் மாநாட்டுக்குத் தலைமைவகிக்க பெங்களூருக்கு வந்திருக்கும் பிரதம தேர்தல் அதிகாரி சுகுமார் சென் அவர்களை, 23—7—56 அன்று காலை 9-மணிக்கு பெங்களூர் ஜலேஹல்லி என்ற இடத்தில் துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன், எம். பி. சுப்பிரமணியம் எம் எல்.ஏ., எஸ். வேதரத்தினம், பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். வி. பதி ஆகியோர் சந்தித்தனர்; அரைமணி நேரத்திற்கு மேல் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

சென்ற பொதுத்தேர்தலில், தமிழகத்தில் மட்டும் பதிவான மொத்த [illegible] 75-இலட்சம்; இதில் [illegible] முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஆதரவு பெற்றவர்கள் 15-இலட்சம் வாக்குகள் பெற்றிருக்கின்றனர்; எனவே 20 சதவிகிதத்திற்கு மேலாகவே தி. மு. கழக ஆதரவாளர்கள் ஓட்டுப் பெற்றிருக்கின்றனர்; தமிழ் நாட்டில் மட்டும் 197 தொகுதிகளில் 81 தொகுதிகளில் மட்டுமே தி. மு. கழக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள் போட்டியிட்டனர்; அவர்களில் 38 பேர் வெற்றியடைந்துள்ளனர் என்றும், தமிழ்நாட்டில் அமைப்பு முறையுடன் கூடிய எதிர்க்கட்சி தி.மு. கழகம்தான் என்றும் எடுத்துக்காட்டி அதன் கிளைகள், உறுப்பினர்கள், நடத்திய மாநாடுகள் ஆகியவைகளின் எண்ணிக்கை விவரங்கள் ஆகியவைகளிலிருந்து அண்மையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் செய்த முடிவுகள்வரை பிரதம தேர்தல் அதிகாரியிடம் விளக்கி, தனிச்சின்னம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

விவரங்களனைத்தையும் ஆற அமரக் கேட்ட பிரதம தேர்தல் அதிகாரி, தாம் ஏற்கனவே செய்த முடிவை இப்போது மாற்றுவதற்கில்லையென்றும், திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் தாம் அறிந்தவையே என்றாலும், தமது உத்தரவை மாற்ற இயலாத நிலையில் இருப்பதாகவும் கூறினர்.

சென்ற தேர்தலில் தி. மு. கழகம் அடைந்த வெற்றிப் பட்டியலும், கழகத்திற்குப் பொதுமக்களிடமிருக்கும் ஆதரவை விளக்கும் குறிப்பும் பிரதம தேர்தல் அதிகாரியிடம் கொடுக்கப்பட்டன.

புதுமுறைச் செயற்கை மழை

ஆஸ்திரேலியாவில்பரிசோதனைகள்

மெல்போர்ன், ஜூலை 24—

செயற்கை மழை உற்பத்தி செய்வதில் புதியதொரு முறையை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் பரீட்சித்து வருவதாகக் கூறப்படுகிறது.

வடக்கு குவீன்ஸ்லாந்து, மத்திய—தெற்கு ஆஸ்திரேலியா பகுதிகளில், ஆயிரக்கணக்கான சதுரமைல் பரப்பில் மழை பொழியச் செய்வதற்கான ஏற்பாடுகள், ஆறு முனைகளில் நடைபெறுவதாகத் தெரியவருகிறது.

மரவள்ளிக்கிழங்கு

உற்பத்தியைப் பெருக்க டில்லியின் திட்டம்

சேலம், ஜூலை 22—

மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் குழு ஒன்று, சேலத்தை தலைமைப்பீடமாகக்கொண்டு மத்திய சர்க்காரால் நிறுவப்படுமாம்.

இதுகுறித்து, சென்னை சர்க்கார் 'மார்க்கெட்டிங்' அதிகாரியான உபயதுல்லா சேலம் மாவட்ட வர்த்தகக் கழகத்தவர்களைச் சந்தித்து உரையாடியதாகத் தெரியவருகிறது.

பிப்ரவரி [illegible] பொதுத் தேர்தல்

ஏற்பாடுகள் குறித்து தேர்தல் அதிகாரி

பெங்களூர், ஜூலை 24—

"வரும் பிப்ரவரித் திங்கள் முற்பகுதியில், அடுத்த பொதுத் தேர்தல்கள் நடத்தப்படும். அதற்கொப்பவே, தேர்தல் கமிஷன் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது" என்று பிரதம தேர்தல் அதிகாரி சுகுமார் சென் கூறியிருக்கிறார்.

"ஒவ்வொரு மாநிலத்திலும், 15 நாட்களுக்குள் வாக்குப் பதிவு நடைபெறும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பம்பாய், சென்னை, மைசூர், ஐதராபாத், ஆந்திரா, திரு-கொச்சி, குடகு ஆகிய மாநிலங்களின் தேர்தல் அதிகாரிகளடங்கிய மாநாடு ஒன்றில் கலந்துகொண்ட பின்பே, சென், இந்தத் தகவலை அளித்திருக்கிறார்.

இலாபத்திற்கு வரையறை கட்டும் நோக்கம்

'இந்திய அரசாங்கத்திற்கு இல்லை' என்கிறார் அமைச்சர்

புதுடில்லி, ஜூலை 25—

பம்பாய் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் அடையும் இலாபத்திற்கு வரையறை கட்டும் நோக்கம் இந்திய அரசாங்கத்திற்கு இல்லை" என்று, மத்தியப் பொதுமராமத்து அமைச்சர், மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 25—7—'56 புதன்

'அந்த எதிர்ப்புப் புரியவில்லை'

விருதுநகர் காமராசர் இம்மாகாணத்தின் முதலமைச்சர் பீடத்திலமர்ந்து கனமாக இருப்பதற்கு ஒரே ஒரு காரணம் தான் உண்டு. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியை நயத்தாலும் பயத்தாலும் ஆட்டிப்படைக்கும் பொறுப்பில் அவர் இருந்து வருகிறார் என்பதுதான் அந்தக் காரணமாகும்.

வரலாற்று அறிவு, சட்டப் புலமை, கலைநூல் தெளிவு, அரசியல் பாண்டித்தியம், ஆளும் திறமை ஆகிய எந்த ஒரு கலையையும் அவர் கற்றறிந்து இருப்பதாகவோ, கேட்டுத் தெரிந்திருப்பதாகவோ நாம் இது வரை, எவரும் விளையாட்டிற்காகவாவதுகூடக் கூறிடக் கேட்டது கிடையாது. இந்த உண்மையை தினம் தினம் அவரால் உமிழப்பட்டுவரும் கீழ்த்தரச் சொற்கள் வலியுறுத்திக் கொண்டு வருகின்றன.

அதுவுமன்றி, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் ஏதேச்சாதிகாரத் தலைவராக, சென்ற சில ஆண்டுகளாக அவரே தொடர்ந்தாற்போல் இருந்துவருவதற்கும், அதற்குரிய அபாரமான திறமை, மற்றவர்களுக்கு இல்லாத அளவு அவருக்கு இருப்பதுதான் காரணம் எனக் கருதிக்கொள்ளவும் முடியாது. நீதிக் கட்சியின் நேரடி விளைவாகத்தான் அந்தப் பதவி அவரிடம் தொடர்ந்தாற்போல் இருந்து வருகிறது எனக் கூறுவது மிகைபடக் கூற—, —ாவது, பார்ப்பன ஆதிக்கத்தை—ராகத் தமிழ்நாட்டில் மூண்டெழுந்த கிளர்ச்சியின் எதிரொலியாகத்தான், தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவி கனம் காமராசரின் முப்பாட்டன் உடைமையாக இருந்து வருகிறது என்பது முக்காலும் உண்மையாகும்.

இம்மூலகாரணத்துடன் மற்றொன்றையும் சேர்த்துக் கொண்டாலும், அது உண்மைக்கு மாறானதாக இருக்காது. அதாவது, கனம் காமராசரை புறமுதுகிடச் செய்யக் கூடிய திறமைசாலிகள் எவரும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் இருக்கவில்லை என்பதே அவருடைய ஏகபோக மிராசுக்குரிய மற்றொரு பொருத்தமான காரணமாகும்.

நீதிக் கட்சியை நிந்தித்தத் தமிழர்கள் அனைவரையும் பாராட்டிப் புகழப் பார்ப்பனக் குடிமக்கள் என்றும் தவறியதே கிடையாது. இப்பொழுதும் அப்பண்பு அந்த மக்களிடம் பட்டுப்போகாமல் இருக்கிறது என்பதை வலியுறுத்தத் தமிழர்களிலே சிலர் இன்றும் கோபுரத்தின் மீதுயர்த்தி, அம்மக்களால் விளம்பரப்படுத்தப் பட்டும் பேசப்பட்டும் வருவதொன்றே போதிய சான்றாகும்.

எனவே, கனம் காமராசர் காங்கிரஸ் கட்சியிலே பெற்றுள்ள உயர்இடமும், மாகாண ஆட்சியிலே பெற்றுள்ள அதிகாரச் சிறப்பும், அவருடைய அறிவாற்றலுக்காகக் கிடைத்திருப்பன அல்லவே அல்ல; அவை தமிழ்நாட்டு அரசியல் சூழ்நிலையின் உருபலன் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்தப் 'புண்ணியவான்' முதன்மந்திரியான நாளிலிருந்து எதிர்க்கட்சியினர் நியாயமாகச் சுட்டிக் காட்டுகிற குறைபாடுகளுக்கும் சரி, மக்கள் எழுப்புகிற நியாயமான கோரிக்கைகளுக்கும் சரி, பதில்கூறி வந்திருக்கிற முறை இருக்கிறதே, அது, எதிர்காலத்தில் முதன்மந்திரிகளாகக் கூடியவர்கள் எழுதிவைத்து மனப்பாடம் செய்து கொண்டு கடைப்பிடிக்கவேண்டிய அளவு பிரபலமானதாகும்!

எது வேண்டும் என்று கோரினாலும், 'ஆகட்டும் பார்க்கலாம்—அதற்கென்ன கவனிக்கிறேன்' — என்று கூறியே கடைசிவரை 'கழுத்தறுப்பு' வேலையில், சர்வ சாதாரணமாக ஈடுபட்டுவருகிற 'ராஜதந்திரி' இந்தக் காமராசர்.

எதிர்க் கட்சியினர், நியாயமான காரணங்களைக் கூட்டிச் சேர்த்துத் தெளிவான ஆதாரங்களை முன்னிறுத்தி, சர்க்காரின் ஒரு குறிப்பிட்ட கொள்கையை எதிர்க்கிறோம் என்று எத்தனை தான் விளக்கம் கூறினாலும், 'ஏனோ இந்த எங்கள் கொள்கையை இவர்கள் எதிர்க்கிறார்கள்; இந்த எதிர்ப்பு ஏன் என்றே எனக்குப் புரியவில்லை' என்று பேசுகிறார், இந்த முதன் —ரி.

—. தமிழ் நாட்டில் இந்தி—சுமார் இருபதாண்டுகளுக்கு முன்பிருந்தே எதிர்க்கப்பட்டு வருகிறது.

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் ஆயிரம் பேர்களுக்கு மேல் சிறைவாசம் செய்திருக்கின்றனர்; இருவர் தங்கள் இன்னுயிரை ஈந்துள்ளனர். அதன் பிறகு சிறுசிறு இடைவெளிகளுடன், தொடர்ந்து இந்தி, பல்வேறு போராட்ட முறைகளால் எதிர்த்து வரப்பட்டுள்ளது இந்த நாட்டில்.

'இந்தி எதிர்ப்பு ஏன்?'—என்பதற்கான விளக்கங்கள், எண்ணற்ற ஏடுகள்—கணக்கற்ற மேடைகள் மூலமாக எழுதியும் பேசியும் சொல்லிக் காட்டப்பட்டுள்ளன. கல்வியறிவு கிஞ்சிற்றும் இல்லாத—விவகாரங்களை கேள்வி ஞானத்தால் மட்டுமே புரிந்து கொண்டு செயல்படக் கூடிய எந்த ஒரு சாதாரண சராசரி அறிவு படைத்த மனிதனும் புரிந்து கொள்ளத்தகும் வகையில், நாம், இந்தி எதிர்ப்புக்கான விளக்கங்களைத் தந்திருக்கும்போது, 'காமராசர், 'எனக்குப் புரியவில்லை' என்று கூறினால், காமராசருக்குப் புரியவைக்க இயலாத நமது திறமைக் குறைவை நொந்து கொள்வதா?—அல்லது, சராசரி அறிவு படைத்த மனிதனும் புரிந்து கொள்ளக்கூடிய நமது எளிய—தெளிவான விளக்கங்களைப் புரிந்து கொள்ள இயலாத காமராசரின், 'மேதாவிலாசத்'தை நொந்து கொள்வதா என்பதே நமக்குத் தெரியவில்லை.

எதிர்க் கட்சியினரின் விளக்கங்கள் புரியவில்லை புரியவில்லை என்று கூறிக் கொண்டே காலத்தைக் கழித்துவிடலாம் என்று எண்ணும் காமராசர், ஒன்றை மறந்துவிடக் கூடாது; தன்னை மக்கள் இதனால் தெளிவாகப் புரிந்துகொள்ளுவர் என்பது தான், அது. இந்தி எதிர்ப்பு ஏன் என்பது, காமராசர்களுக்குப் புரிந்ததாக வேண்டுமென்பதல்ல; மக்களுக்குப் புரிந்தால்போதும்.

30,000 பேர் வேலையின்றித் தவிப்பு

சிங்கப்பூரில் நிலைமை

சிங்கப்பூர், ஜூலை 22—சிங்கப்பூர் வேலையில்லாதோர் சங்கம் தந்துள்ள கணக்குப்படி, 30,000 தொழிலாளர்கள் சிங்கப்பூரில் வேலையின்றி இருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்போதிருந்து ஆண்டுதோறும் 14,000 வேலைகள் காலியாகக் கூடும் என்றும், பரம்பரையாகப் பார்க்கக்கூடிய வியாபாரம், தொழில் இவற்றில் வேலை வாய்ப்புகள், அதிகரித்துவரும் மக்கள் தொகைக்கு இணையானதாக இருக்க முடியாது என்றும் சங்கத்தவர் கூறுகின்றனர்.

'அணுகுண்டு யுத்தம் வராது'

ஈடன் அளிக்கும் அபயம்

இலண்டன், ஜூலை 23—"எந்த ஒரு வல்லரசும் இன்று, ஆயுதங்களைக்கொண்டு தாக்குதல் நடத்த முற்படாது; இது குறித்து இன்று நான் உறுதி கூறமுடியும்; ஆனால், என்றைக்கும் ஸ்திரமான உறுதியை என்னால் தர இயலாது.

'அமெரிக்கா, ரஷ்யா ஆகிய உலகின் இருபெரும் வல்லரசுகள் இராஜ்யங்களைக் குண்டுகளை வைத்திருப்பதானது, 'இரும்புத் திரை'யின் இருமருங்கில் உள்ளோரிடையேயும் இராணுவ விவகாரங்கள் குறித்து புதியதொரு சிந்தனையை மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்திப்பதாகும்"

என்று பிரிட்டிஷ் பிரதமர் ஈடன், மக்கள் சபையில், வெளிநாட்டு விவகாரங்கள் பற்றிய விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

குற்றப் பரம்பரையினருக்குச் சம்பளச் சலுகை

சர்க்காரின் புதிய உத்தரவு

சென்னை, ஜூலை 24—சேலம், தென் ஆற்காடு, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள பழைய குற்றப் பரம்பரையினரின் குழந்தைகளுக்குப் பள்ளிகளில் முழு சம்பளச் சலுகை அளித்து முன்பு சென்னை அரசாங்கம் பிறப்பித்திருந்த உத்தரவைத் திருத்தி, புதிய உத்தரவு ஒன்றை சென்னை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது.

இப்புதிய உத்தரவின்படி தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள மெலையங்குப்பம், திருச்சி மாவட்ட தென்னூர் கிராமம் ஆகிய இடங்களிலுள்ள வன்னிய குல க்ஷத்திரிய வகுப்பினர், படையாச்சிகளின் குழந்தைகளுக்கு மட்டும் முழு சம்பளச் சலுகை கிடைக்கும்.

'தனி இன மக்களுக்கு சரியான சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்'

'நாகர்கள் ஒன்பதாண்டு காலமாக தனிநாடு கோரி வருகின்றனர்'

'அவர்களை ஒடுக்கும் டில்லியின் அடக்குமுறை அநாகரீகமானது'

'சோஷலிஸ்டு' இதழ் வாதிடுகிறது

"நாகர்கள், தங்களுக்குத் தனிநாடு வேண்டும் என்று 1947 முதல் கோரி வருகிறார்கள்; அன்று முதற்கொண்டே இப்பிரச்சினை கவனிக்கப்படாத காரணத்தால், இன்று, சீரழிந்த நிலை ஏற்பட்டுள்ளது.

"நாகாமலைப் பகுதியைச் சேர்ந்த கோகிமா என்கிற ஊரில், பண்டித நேரு ஒரு கூட்டத்தில் பேசினார்; அதில் அவர், 'நாகர்களின் தனிநாடு கோரிக்கையை ஏற்க முடியாது' என்று கூறினார். ஒரு சில சர்க்கார் அதிகாரிகளைத் தவிர கூட்டத்திலிருந்த 5,000 நாகர்களும், தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டு எழுந்து சென்று விட்டனர்.

"அங்கே இருந்த அதிகாரிகள், நாகர்களின் பிரதிநிதிகளை 'நேருவைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறோம், வாருங்கள்' என்று வருந்தி அழைத்தார்கள்; ஒருவர்கூட எட்டிப் பார்க்கவில்லையாம்!

"இந்திய சர்க்கார், சமீபத்தில், நாகர்களை வழிக்குக் கொண்டுவரச் செய்துவரும் முயற்சிகள், 'நாகரீக உலகில் நாமும் ஒரு நாடு' என்று சொல்லிக் கொள்ளத்தக்கதாக இல்லை.

"ஒரு இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு சரியான சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்.

"தன்னுடைய சொந்த நாட்டு மக்களுடன் துப்பாக்கியுடன்தான் பேசுவேன் என்று ஒரு சர்க்கார் கூறிற்று என்றால், அந்த சர்க்காரை, சலாசர், இட்லர், முசோலினி ஆகிய சர்வாதிகார ஆட்சிமுறைகளுடன் ஒப்பிடுவதிலே என்ன தவறு இருக்கமுடியும்?"

—என்று, 22—7—56 'சோஷலிஸ்ட்' இதழ் கேட்டுவிட்டு தொடர்ந்து கூறுவதாவது:—

"இந்தியாவின் வடகிழக்குப் பகுதி, கடந்த ஓராண்டுக் காலமாக மிக மோசமான நிலையை அடைந்து வருகிறது. இந்திய சர்க்கார்—நேருவின் ஆட்சி—பதவியேற்ற கடந்த எட்டாண்டுக் காலத்தில் மேலும் சிக்கலாகிவிட்ட பல பிரச்சினைகள் உண்டு; அவற்றில் எல்லாவற்றையும் விட, 'இனி தீர்க்கவே முடியாது' என்ற நிலையை அடைந்துவிட்டது நாகர்களின் பிரச்சினை!

"ஒரு விஷயத்தைப் பற்றித் தெளிவான கண்ணோட்டமோ, அல்லது, அதனைத் தீர்க்கவேண்டும் என்பதில் உண்மையான அக்கறையோ இல்லாவிட்டால், அப்பிரச்சினை தீருவதென்பது கடினம் அதிலும், பிறப்பிலேயே இந்தியாவின் மற்ற பகுதி மக்களிலிருந்து வாழ்க்கை, கலாச்சாரம், நாகரிகங்களில் முற்றிலும் மாறுபட்டுள்ள ஒரு தனி இனம் பற்றிய விவகாரத்தை அணுகுவதில், சர்வ ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். இந்த ஜாக்கிரதை தவறிப்போனதன் காரணமாகவே நாகர்களின் பிரச்சினை முன்னைவிட மோசமாகிவிட்டது.

"ஏறத்தாழ, பத்தாயிரம் சதுரமைல் பரப்பளவில், இரண்டரை இலட்சத்திற்கு மேற்பட்ட நாகர்கள் வசிக்கிறார்கள். இங்கு, இந்திய அரசாங்கமோ, அல்லது அவர்களுக்கு முந்திய வெள்ளை அரசாங்கமோ நாகர்கள் பிரச்சினை பற்றி கவலைப்படவில்லை இதன் காரணமாக, மற்ற இந்திய மக்களுக்குக் கிடைத்த எவ்வித வசதியும் நாகர்களுக்குக் கிடைக்கவில்லை.

"வெள்ளைக்காரர்கள் வெளியேறும் தருணத்தில் இருந்த சூழ்நிலை, நாகர்களின் தனி நாட்டுக் கோரிக்கைக்கு ஆக்கமளித்தது.

"சென்ற 1952-ம் ஆண்டு அக்டோபரில், அசாம் மாகாண தலைநகரான ஷில்லாங் நகரில், இந்தியப் பிரதமர் பண்டித நேரு பேசுகையில், 'நாகர்கள் தனி நாடு கோருவதென்பது நடவாத காரியம்; அது அர்த்தமற்றது; மடத்தனமானது' —என்றெல்லாம் பேசினார்.

"இதைத் தொடர்ந்து, இந்திய சர்க்காரை எதிர்த்து பல 'முயற்சி'கள் நடந்தன. சர்க்கார் பள்ளிக்கூடம் ஒன்று மூடப்பட்டதாம்; காரணம் என்ன தெரியுமா? இந்திய தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்துமாறு குழந்தைகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்; குழந்தைகள், 'முடியாது' என்றனர்; பள்ளிக்கூடம் மூடப்பட்டது; உடனே நாகர்கள், தங்களுக்கென வேறு ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

"இது மட்டுமல்ல; நாகர்களின் ஒரே கட்சியான நாகா தேசியக் கவுன்சில்,' அம்மக்களின் மத்தியில் எத்தனை செல்வாக்குப் பெற்று விளங்குகிறது என்பதற்கு, இது ஒரு எடுத்துக் காட்டு!

"சென்ற பொதுத் தேர்தலின் போது, 'தேர்தலில் யாரும் கலந்துகொள்ளக் கூடாது' என்று அக்கட்சி ஒரு வேண்டுகோள் விடுத்தது; அதற்கிணங்க, அங்கே தேர்தல் நடைபெறவில்லை; எவரும் 'ஓட்டு'ப் போட வரவில்லை; அபேட்சகர்களாக எவரும் நிற்கவில்லை!

"கடந்த தேர்தல் முடிந்த பிறகு, இன்றுவரை அங்கே பொறுப்பான மக்களாட்சி நடைபெற இந்திய சர்க்கார் எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. சுதந்திரத்திற்கு முன்பிருந்து இயங்கிவந்த சில 'கவுன்சில்'களும் பின்பு கலைக்கப்பட்டன.

"இதற்கிடையில், அசாம் மாகாணப் போலீஸ், நாகர்களின் தனிப்பெரும் தலைவராக விளங்கும் பிசோவின் ஆதரவாளர்களைத் தாக்குவதும், அவர்கள் வசிக்கும் கிராமங்களைத் தீயிட்டுக் கொளுத்துவதுமான செயல்களில் ஈடுபட்டது.

"நாகர் தேசியக் கவுன்சிலின் செல்வாக்கை உடைப்பதில் வெற்றி பெற முடியாத சர்க்கார், பொய்யும் புரட்டும் செய்ய ஆரம்பித்தது; 'நாகர் தேசியக் கவுன்சிலின் அஸ்திவாரம் கலகலக்கிறது' என்றும், 'பிசோ அந்தக் கட்சியைக் கலைத்துவிட்டார்' என்றும் பிரச்சாரம் செய்தார்கள். ஒரு சில நாகா தலைவர்களைக் கொண்டு இம்மாதிரி விஷயங்கள் நடந்தன; ஆனால், இதற்குப் பலன் ஒன்றும் ஏற்படவில்லை.

"நாகர்கள் இதுவரையில் ஆயுதங்களுடன் போரிட்டவர்களல்ல; ஆனால், இன்று அவர்கள் கையில் ஆயுதங்கள் இருக்கின்றன. இந்த ஆயுதங்கள் எங்கிருந்து வருகின்றன? இவைகளைக் கையாளுவதற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

ஏழையின் வரிப் பணம் பாழாகும் விதம்

'சாதனை'களைப் பறைசாற்ற காங்கிரஸ் மந்திரி கையாண்ட முறை

"பீகாரிலுள்ள சிறைச்சாலைகளில் செய்யப்பட்டுள்ள சீர்திருத்தங்களை விளம்பரஞ் செய்ய, அம்மாகாண அரசாங்கம் ஏராளமான பணத்தை வீண் விரயஞ் செய்துள்ளது. உயர்ந்த விலை மதிப்புள்ள அழகிய 'ஆர்ட்' காகிதங்களில் தனது சாதனைகளைப் பொறித்து, ஏராளமான அறிக்கைகளை பீகார் அரசாங்கச் சிறைச்சாலை நிருவாக அமைச்சுத் துறை தயாரித்திருக்கிறது.

"அறிக்கை முழுவதுமே 'ஆர்ட்' காகிதங்களில் அச்சிடப்பட்டுள்ளது! அரசாங்கத்தின் சாதனைகளை பறையறைந்து பரப்புவதற்கு விலை மதிப்புள்ள உயர்ந்த ரகக் காகிதந்தான் தேவை போலும்!

"தேர்தல்கள் நெருங்கி வருவதற்கும், இதுபோன்ற அனாவசியமான ஆடம்பர விளம்பரங்களுக்கும் தொடர்பில்லையென்று எப்படி நம்ப முடியும்?

"இதில், நகைச்சுவைக்குரிய மற்றொரு அம்சமும் காணப்படுகிறது. சிறைச்சாலை நிருவாகத் துறை அமைச்சரின் புகைப்படங்கள் எட்டுப் பக்கங்களில் காட்சி அளிக்கின்றன; இதுபோன்றே, தத்தமது துறையினரின் சாதனைகளெனக் கருதப்படுவனவற்றை யெல்லாம் 'ஆர்ட்' காகிதங்களில் அறிக்கைகளாகத் தயாரிப்பதென மற்ற அமைச்சுத் துறைகளும் போட்டி மனப்பான்மை கொள்ளுமானால் பொது மக்களின் வரிப் பணத்தின் கதி என்னவாகும்?

"வறுமையும், நோயும், அறியாமையும் மிகுந்து கிடக்கும் ஏழை நாடாகிய இந்தியாவில் அரசாங்கம் சாதிக்கவேண்டிய பணிகள் எத்தனையோ உள்ளன. இந்நிலையில், ஒரு சில சாதனைகளைக் குறித்துப் பிரசாரம் செய்வதற்காக இத்தகைய பொருள் விரயம் தேவையற்றது மட்டுமல்லாமல், ஒரு பெருங் குற்றமுமாகும்."

என்று, 22—7—56 'தமிழ் நாடு' இதழ், தனது துணைத் தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

ஒரிய மொழிப் பகுதிகள்

'சிதறிக் கிடப்பதை ஒன்று சேர்க்க வேண்டும்'

'அதற்கு ஆற்றல் படைத்த சர்க்கார் அமைய வேண்டும்'

உத்கல் சம்மேளனம் வேண்டுகோள்

கட்டாக், ஜூலை 24—

"ஒரிய மொழி பேசும் பிரதேசங்கள், வெளி மாநிலங்களில் சிதறிக் கிடப்பதை ஒன்று கூட்டி உருவான ஒரிசா மாநிலம் அமைக்கக்கூடிய சர்க்கார் ஒன்றை நிறுவுவதற்கு மக்கள் முயற்சிக்க வேண்டும்,"

என்று, உத்கல் சம்மேளனத்தின் செயற் குழு கேட்டுக்கொண்டிருக்கிறதாம்.

இந்தச் சம்மேளனம் எல்லா ஒரிய மொழி வழங்கும் பகுதிகளையும் ஒன்றாக இணைக்க வேண்டும் என்பதற்காக, கடந்த 50 ஆண்டுகளாகப் பணியாற்றிவருவதாகும்.

புவனேஸ்வரில் இந்தச் சம்மேளனச் செயற் குழுக் கூடியபோது 'எல்லைகள் பற்றிய விவகாரம் பட்டுப்போய்விடாதபடி எல்லா ஜனநாயக வழிகளிலும், அமைதியான முறையில் பார்த்துக்கொள்ள வேண்டும்,' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

'மாநில புது அமைப்பு மசோதா விவாதத்திற்காக அனுப்பிவைக்கப் பட்டிருப்பதும், ஒரிசாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் விவாதிக்க விரும்பியும், ஒரிசா சர்க்கார், மசோதாவை சட்டசபையில் விவாதிக்காதது வருந்தற்குரியதாகும்' என்று, சம்மேளனக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய சிங் தேவ் எம்.பி., கூறியிருக்கிறார்.

நெசவாளர் கடன்களை சர்க்காரே செலுத்துவர்

உத்தேசத் திட்டம் குறித்து கூட்டுறவு இலாகா தலைவர் விளக்கம்

சென்னை, ஜூலை 24—

நெசவாளர்களின் கடன்களைச் சர்க்காரே செலுத்திவிட்டு, கூட்டுறவு இயக்கத்தில் அவர்களைக் கொண்டுவருவதற்கு ஒரு உத்தேசத் திட்டம் இருப்பதாகவும், பரீட்சார்த்தமாக இத்திட்டம் பரிசீலனை செய்யப்படுமென்றும் கூட்டுறவு இலாகா தலைவர், பழனியப்ப (முதலியார்) கூறியுள்ளார்.

"இந்தத் திட்டத்தின் கீழ் சர்க்கார் உதவியைப் பெறும் நெசவாளர்கள், தற்போதுள்ள கூட்டுறவு சங்கங்களிலோ, அல்லது புதிதாகத் துவக்கப்படவிருக்கும் சங்கங்களிலோ சேர்த்துக்கொள்ளப்படுவர்; சங்கங்களில் இதுவரையில் சேராமலிருக்கும் சுமார் பத்தாயிரம் நெசவாளர்களில் பாதிப் பேர் இத்திட்டத்தின் மூலம் கூட்டுறவு இயக்கத்தில் சேருவதற்கு வழி ஏற்படும்," என்றும் அவர் கூறிவிட்டு, மேலும் சொன்னார்:—

"சென்னை மாநிலத்தில் ஐந்து இலட்சம் கைத்தறிகள் உள்ளன; இதில், ஒன்றேகால் இலட்சம் தறிகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுகின்றன; மீதித் தறிகள் 'மாஸ்டர் வீவர்'கள் கண்காணிப்பில் உள்ளன.

"'மாஸ்டர் வீவர்'களிடமிருந்து நெசவாளிகள் எளிதில் கடன் வாங்கி விடுகின்றனர்; எனவே, அவர்களுக்குக் கடன் பளு அதிகமாகிறது; இதனால் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் சேர இயலாமல் போய்விடுகிறது. இந்நிலையை மாற்றுவதற்காகத்தான், சர்க்கார் இப்புதிய யோசனையைப் பரிசீலனை செய்கிறது.

"தறி ஒன்றுக்குத் தற்போது ரூ. 80 வீதம் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. மத்திய பாங்கி, தறிக்கு ரூ. 120 வீதம் வழங்குவதற்குத் தயாராகவும் இருக்கிறது."

நடிப்பு இசைப் புலவர்

கே. ஆர். இராமசாமி

ஜூலை 27-ந்தேதி மலேயா பயணம்

சென்னை, ஜூலை 25—

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழு உறுப்பினரான நடிப்பு இசைப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், தம் நாடகக் குழுவினருடன், ஜூலை 27-ந்தேதி காலை 10 மணியளவில் விமானமூலம் மலேயா பயணமாகிறார்.

மலேயாவில், நடிப்பு இசைப் புலவரவர்கள் பல நாடகங்களை நடத்தி, அங்குள்ள தமிழ் மக்களை மகிழ்விப்பார் என்று தெரியவருகிறது.

(ந. கி.)

இந்தியாவிற்கு ரஷ்ய விமானங்கள்

வாங்குவது பற்றி சர்க்கார் யோசனை

புதுடில்லி, ஜூலை 22—

இந்தியன் ஏர் லைன்ஸ் கார்ப்பரேஷனின் உபயோகத்திற்காக ரஷ்யாவிலிருந்து சில விமானங்களை வாங்கலாமாவென்று இந்திய சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாக மக்கள் சபையில், அமைச்சர் ஜெகஜீவன்ராம் தகவல் தந்துள்ளார்.

விமானங்களின் விலைபோன்ற விவரங்களைப்பற்றி பேரம் நடந்துகொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

'இந்த விமானங்கள் இந்தியாவுக்கு ஏற்றவையா? எவ்வளவு காலம் அவை உழைக்கும்?' என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த விமானங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் கட்டப்பட்டனவென்றும், ஆகவே, எவ்வளவு காலம் உழைக்கும் என்று சொல்லுவதற்கில்லையென்றும் மந்திரி பதிலளித்தார்; ஆனால், இப்போது சர்க்காரிடமுள்ள ஒரு ரஷ்ய விமானம் திருப்திகரமாக வேலை செய்கிறதென்றார்.

பூமியின் வெப்பம் அதிகரிக்கும்

விஞ்ஞானியின் எச்சரிக்கை

ரியோ டி ஜெனிரோ, ஜூலை 24—

வாயு மண்டலத்தில் கரியமில வாயுவின் அளவு அதிகரித்து வருவதாகவும் இதனால் 2010-ம் வருடத்திற்குள் பூமியின் வெப்பம் மிகவும் அதிகரித்துவிடக்கூடுமென்றும் அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் எச்சரித்துள்ளார்.

தொழிற்சாலைகளிலிருந்து வரும் புகையினாலும், எண்ணெய் எரிவதால் ஏற்படும் புகையினாலும் வாயு மண்டலத்தில் கரியமில வாயு அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாசத்தை விளைவிக்கும் நச்சு ஆயுதம்!

வாஷிங்டன் ஜூன் 24—

அமெரிக்கப் பிரதிநிதித்துவ சபையில், ராபர்ட் ராஸ் என்பவர் வாசித்த அறிக்கை ஒன்றில், 280 மில்லி மீட்டர் குண்டொன்று வெடித்தால் எவ்வளவு வெப்பம் ஏற்படுமோ அந்த அளவுக்கு அணு முகத்துடன் கூடிய அணு ஆயுதம் (பறக்கும் குண்டு) ஒன்று வெடித்தால் ஏற்படுமென்றும், 50 சதவிகிதத்தினருக்கு மரணம் ஏற்படும்—அதாவது, குண்டு வெடிக்கப்படும் இடத்திலிருந்து ஒருமைல் சுற்று வட்டாரத்திற்கு ஆபத்து விளையுமென்றும் கூறியுள்ளார்.

பொதுத் தேர்தலில் வாக்குச் சீட்டுகள்

புதிய வடிவில் இருக்குமென தேர்தல் அதிகாரி அறிவிப்பு

திருவனந்தபுரம், ஜூலை 25—

அடுத்த பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள், பச்சை, பழுப்பு ஆகிய நிறங்களில் புதிய வடிவில் இருக்கும் என்று இந்தியத் தலைமை தேர்தல் அதிகாரி சுகுமார் சென் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

'வாக்குச் சீட்டில் குறி போடும் புதிய வாக்களிப்பு முறையைக் கொண்டுவருவது பற்றி நான் இன்னும் ஆலோசித்துவருகிறேன். வாக்களிப்பு முறை குறித்து மக்களின் கருத்தை அறிந்துவருகிறேன்.

"புதிய வாக்குச் சீட்டில், அபேட்சகர்களின் பெயர்களும், அவர்களின் தேர்தல் சின்னங்களும் பொறிக்கப்பட்டிருக்கும்; எழுதப் படிக்கத் தெரியாத வாக்காளர்கள் கூட, தங்களுக்கு விருப்பமான அபேட்சகரின் சின்னத்திற்கு எதிராகக் குறி போட்டு, அவருக்கே வாக்களிக்க முடியும். இரகசிய வாக்களிப்பை, புதிய முறை பாதிக்காது.

"அடுத்த பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள், புதிய உருவில் அமைந்திருக்கும்.

"பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் பச்சை நிறத்தில் இருக்கும்; அவற்றின் மேல், 'பாராளு மன்றம்' என்று அச்சடிக்கப்பட்டிருக்கும்.

"சட்டசபைத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் பழுப்பு நிறத்தில் அமைந்திருக்கும்; அவற்றின்மேல், 'சட்டசபை' என்று அச்சடிக்கப்பட்டிருக்கும்."

6-மாத காலத்திற்கு மீன்கள் கெடாதாம்!

கொல்லம், ஜூலை 24—

ஆறுமாத காலத்திற்கு மீன்கள் கெட்டுப்போகாமல் வைத்திருப்பதற்கு ஒரு குளிர்சாதன நிலையம் இப்பகுதியில் நிறுவப்படவிருக்கிறதாம்; இதற்கு ஐந்து இலட்சம் ரூபாய் செலவாகுமாம்.

இந்தியா—நார்வே அரசாங்கங்களின் கூட்டு முயற்சியில் அமைக்கப்படும் இந்நிலையத்தில், நாள் தோறும் 300 முதல் 400 டன் வரை மீன்கள் சேமித்து வைக்கப்படுமாம்.

சிதம்பரத்தில் ஈ. வெ. கி. சம்பத்

22—7—56 அன்று சிதம்பரத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்.

காலை 10-30 மணியளவில் ஈரோடிலிருந்து, தோழர் கரூர் கிட்டு அவர்களுடன் தோழர் சம்பத் அவர்கள் சிதம்பரம் வந்து சேர்ந்தார்.

மாலை 5 மணிக்கு சிதம்பரம் தாவடித் தெருவிலுள்ள வள்ளுவர் படிப்பகத்தைப் பார்வையிட்டார். செயலாளர் இராதாகிருஷ்ணன், தமிழ்மணி, சோமு, குருசாமி, நூர்ராஜ் போன்றோரால் வரவேற்கப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டார்; பின்பு நடந்த தேநீர் விருந்திலும் கலந்துகொண்டார்.

மாலை 5-30 மணியளவில், கடைவீதி கஞ்சிதொட்டி முனையில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

மாலை 6 மணிக்கு கமலீஸ்வரன் கோவில் தெருவிலுள்ள கருணைக் கழக படிப்பகத்தைப் பார்வையிட்டார். சோஷலிஸ்ட் கட்சி கோவிந்தராசன், வேணு முதலியோர் வரவேற்றனர்.

மாலை 6-30 மணிக்கு டவுன் ஹால் மைதானத்தில் நகரசபை உறுப்பினர் தோழர் இரா. சக்கிரவர்த்தி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர்கள் ஆர். பாலகுருசாமி, பொன்-சொக்கலிங்கம், தில்லை-வில்லாளன் ஆகியோர் பேசிய பிறகு தோழர் சம்பத் அவர்கள் இன்றைய அரசியல் நிலைபற்றி விரிவாகப் பேசினார். செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டத்தில், தேர்தல் நிதிக்கென சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி ஒன்பதாம் படிவக மாணவர்களால் 303 காலணாக்களும், வல்லம்படுகை துரைசாமி அவர்களால் ஒரு ரூபாயும் அளிக்கப்பட்டது.

முயற்சி தோற்றுவிட்டதாம்

புதுடில்லி, ஜூலை 24—

ரஷ்யாவிடமிருந்து பர்மா பெற்றுள்ள சிமெண்டை, இந்தியா வாங்கும் முயற்சி தோற்றுவிட்டதாக மக்கள்...

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

மதுரை:

18—7—56 மாலை 5 மணியளவில், மதுரை தாளமுத்து - நடராசன் நினைவுப் படிப்பகத்திலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, மாசிவீதிகள் வழியாகச் சென்று திலகர் திடலை அடைந்தது. தோழர் கே. எஸ் சந்தானம் தலைமையில், மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ் முத்து, தமிழ்ப்பித்தன், காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் ஜூலை 15—மும்முனைப் போராட்டம் பற்றியும், இன்றைய அரசியல் நிலைபற்றியும் விரிவாகப் பேசினர்.

சென்னை — புதுப்பேட்டை:

15—7—56 பகல் 2 மணிக்கு அண்ணா படிப்பகப் பணி மனையில், தோழர் என். எஸ் எல். நாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. இரத்தினம், எஸ். சுந்திரம் ஆகியோர் மும்முனைப் போராட்டம் குறித்து பேசியபின், போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்கட்கு வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை 11-வது வட்டம்:

18—7—56 மாலை 6 மணிக்கு, தோழர் து. தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் கழகத் தோழர்கள் பலர், மும்முனைப் போராட்டம் பற்றிப் பேசினர்.

உதகை:

20—7—56-ல் தி. மு. கழக அலுவலகத்தில், தோழர் ப. மு. குமார் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் நஞ்சுண்டன், மாணிக்கம், தி. செயராமன் ஆகியோர் மும்முனைப் போராட்டம் பற்றியும், அக்காலை நினைவில்கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் விரிவுரையாற்றினர். இறுதியில், 5-8-56-ல், நகர தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

பாலக்காடு:

15—7—56 மாலை 6 மணிக்கு, தோழர் இரா. கிருஷ்ணன் தலைமையில் பகுத்தறிவு மன்றத்தில் நடைபெற்றது. தோழர்கள் சி. வி. சோமசுந்தரம், கே. அச்சுதன், காதர்ஷா ஆகியோர் மும்முனைப் போராட்டம் குறித்துப் பேசினர்.

கோவை:

22—7—56-ல், கோவை 29-வது வட்டத்தைச் சேர்ந்த அழகிரி நினைவுப் படிப்பகத்தின் சொற்பயிற்சி மன்றச் சார்பில்; தோழர் சின்னசாமி தலைமையில், 'மும்முனைப் போராட்டம்' என்ற தலைப்பில், தோழர்கள் அங்குதாசு, எம். கே. சாமி, இராமனுதன், அசலம், சாகுல் அமீது, கு. ப. செ. நாதன், கு. பா. சா.மணி ஆகியோர் பேசினர்.

நேருவின் எதேச்சாதிகாரத்திற்கு தேஷ்முக் சாட்டையடி!

பதவியைத் துறந்து பாடம் புகட்டுகிருர்

'மந்திரி பதவியைவிட மராட்டியமே பெரிது'

புதுடில்லி, ஜூலை 24—

தாய்நாட்டுப் பற்று, மக்கள் கருத்திற்கு செவிமடுக்கும் ஜனநாயகப் பண்பு, சரி எனப்பட்டதை நிலைநாட்ட வேண்டும் என்ற நேர்மை உள்ளம் இவற்றிற்கு ஒரு பெரும் உருவாக டில்லி நிதி மந்திரி தேஷ்முக் நின்றுகொண்டிருக்கிருர்.

'பம்பாய் மராட்டியத்துடன்தான் இணையவேண்டும் என்ற கலப்பற்ற நியாயத்தை அநியாயமாகக் கொன்றுவிட்ட பண்டித நேருவின் தலைமையின்கீழ் நான் மந்திரியாக இருக்கமாட்டேன்; மந்திரி பதவியைவிட மராட்டிய மண்டலம் எனக்குப் பெரிது' என்று நிதி முழக்கமிட்டுப், பதவியைத் துறந்திருக்கிருர் தேஷ்முக்.

அவர் ஏற்கனவே தாக்கல் செய்திருந்த இராஜிநாமாக் கடிதத்தை குடியரசுத் தலைவர் பரிசீலித்துவிட்டு இன்று ஏற்றுக்கொண்டிருக்கிருர்.

'இந்திய அரசியல் சட்ட 75-வது விதியின் 2-ம் பிரிவின்படி, மிக்க வருத்தத்தோடு, நிதி மந்திரி தேஷ்முக் அவர்களின் இராஜிநாமாக் கடிதம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது' என்று, குடியரசுத் தலைவரின் அறிவிப்பு கூறுகிறது.

தேஷ்முக்கின் இராஜிநாமாவைத் தொடர்ந்து, நிதி மந்திரி இலாக்காப் பொறுப்பினை பிரதமர் நேரு ஏற்றுக்கொண்டிருக்கிருர் என்று தெரியவருகிறது.

தேஷ்முக் இப்போது, மக்கள் சபையில் சாதாரண ஒரு உறுப்பினர்; அவர், மக்கள் சபை காங்கிரஸ் கட்சியிலிருந்தும் விலகிக்கொள்வார் என்றும், எந்த ஒரு மக்கள் சபை உறுப்பினரும் திட்டக் குழுவில் உறுப்பினராக இருக்கமுடியாது என்பதால் திட்டக் குழுவிலிருந்தும் விலகிக்கொள்வார் எனவும் தெரியவருகிறது.

மக்கள் சபையில் மாநிலப் புது அமைப்பு மசோதா விவாதத்திற்கு வரும்போது தேஷ்முக், மராட்டிய மாநில அமைப்பு குறித்தும், பம்பாய் குறித்தும் தனது கருத்தினை தெளிவாக அறிவிப்பார் என்று தெரியவருகிறது.

வேறு ஒரு தகுதியுடையவர் கிடைக்கும் வரையில், நேருவே நிதி இலாகா பொறுப்பையும் கவனித்து வருவாராம்.

இராஜிநாமாச் செய்த நிதி மந்திரிகளுள் தேஷ்முக் மூன்ருவதாவார். ஆர். கே. ஷண்முகம் (செட்டியார்), ஜான்மத்தாய் ஆகிய இருவர் முன்பு நிதிமந்திரிகளாயிருந்து விலகினர்.

'புதியஇந்தியா'அமைப்பின் இறுதிக் கட்டம்

மாநிலப் புது அமைப்பு மசோதா: மக்கள் சபையில் 45 மணி நேர விவாதம்

புதுடில்லி, ஜூலை 24—

மாநிலப் புது அமைப்பு மசோதாவினை விவாதிப்பதற்கு மக்கள் சபையில் 45 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நேரம் போதுமானதல்லவென்றும், குறைந்தது 60 மணி நேரமேனும் இதற்கு வேண்டுமென்றும், மாநில புது [illegible] முக்கியமான விவகாரத்தில் சர்க்கார் அவசர அவசரமாக [illegible] செய்துவிடக் கூடாது என்றும், மக்கள் சபையில் இது கு[illegible]மாக விவாதிக்கப்படுவதை சர்க்கார் தடுக்கக் கூடாது என்[illegible]கட்சியினர் சிலர் எடுத்துரைத்தனர்.

இது குறித்துப் பேசுகையில் பிரதமர் நேரு, துவக்கத்தில் மசோதாவை விவாதிக்க சர்க்கார் 30 மணி நேரம் மட்டுமே கோரியதாகவும், பின்னர், சபையில் உள்ள எல்லாப் பிரிவினரும் விவாதத்தில் பங்கு பெறுவான்வேண்டி, சபையின் வேலை முறை ஆலோசனைக் குழுவின் சிபாரிசுப்படி 45 மணி நேரமாக அது உயர்த்தப்பட்டது என்றும், இதனுல் சர்க்கார், இந்த விவகாரத்தைத தட்டிக் கழிப்பதாகக் கூறுவது தவறு என்றும், நிர்க்கமாக மசோதா விவாதிக்கப்படுவதில் சர்க்காருக்குத் தடையேதும் இல்லை என்றும், ஆனுல், எந்த ஒரு அளவு இருக்கவேண்டியது அவசியம் என்றும் கூறினுராம்.

தோழர் காட்கில், இப்போது ஒதுக்கப்பட்டுள்ள 45 மணி நேரம் போதுமானதல்ல என்று தலைவர் கருதினுல், நேரத்தை நீடித்துக் கொள்ளலாம் என்றும் கூறியிருக்கிருர்.

பின்னர், சிபாரிசுப்படி, 45 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் சட்ட ஒன்பதாவது திருத்த மசோதாவிற்கு 15 மணி நேரம்; பீகார் மற்றும் மேற்கு வங்க நில மாற்ற மசோதாவிற்கு 6 மணி நேரம்; ஆறுகளுக்கான போர்டு மசோதாவிற்கு 5 மணி நேரம்; மாநிலங்களுக்கிடையேயான தண்ணீர் தகராறு மசோதா 4 மணி நேரம்; தொழில் தகராறு திருத்த மசோதாவிற்கு 3 மணி நேரம்; அகில இந்தியக் கதர் மற்றும் கிராமத் தொழில் கமிஷன் மசோதாவுக்கு 12 மணி நேரம்; இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 30 மணி நேரம்—என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் ஊழியம் புரியும் பெண்கள்

இனி பிரயாணப் படிச் சலுகை பெறமுடியாது

சென்னை, ஜூலை 23—

சர்க்காரில் ஊழியம் புரியும் பெண்களுக்குத் தரப்பட்டுவந்த பிரயாணப் படிச் சலுகை இப்போது ரத்து செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பெண் ஊழியர்கள், தங்கள் 'கிரேட்' ஊழியத்திற்கு அடுத்த உயர்ந்த 'கிரேட்' ஊழியத்திற்கு உள்ளதைப்போன்று, பிரயாணப் படி பெற்றுவந்தனர்; இப்போது அந்த மாதிரி உயர்தரப் 'படி' தருவது அரசியல் சட்டவிதிகளுக்கு முரணுனது என்பதால், சர்க்கார் அந்தச் சலுகையை ரத்து செய்து உத்தரவு பிறப்பித்துள்ளனராம்.

இப்போது தாங்கள் பணிபுரியும் 'கிரேட்' ஊழியத்திற்குரிய பிரயாணப் படியே பெண்களுக்குக் கிடைக்கும் என்று தெரியவருகிறது.

'சோஷலிஸ்டு' வாதிடுகிறது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் பயிற்சி தருகிருர்கள்?—இதெல்லாம், சிந்திக்க வேண்டிய விஷயங்களாகும்.

"சர்க்கார் அதிகாரிகள் தரும் செய்திகளை நம்பி இந்திய ஆரசாங்கம் இப்பொழுது அங்கு இராணுவத்தை அனுப்பியுள்ளது; இது வரையில் அங்கு நடந்த கொலைகளுக்கும், வெறிச்செயல்களுக்கும் கணக்கு வழக்கே கிடையாது.

"புனிதமான அகிம்சை பேசும் சர்க்கார், மக்களை அங்கு கொல்வதோடு நிற்கவில்லை; அங்குள்ள மாதர்களைக் கற்பழித்திருக்கிருர்கள். நாகர் தேசீயக் கவுன்சிலின் ஆதரவாளர்கள் வசிக்கும் இடங்களனைத்தும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

"இதற்கெல்லாம் பின்னுல் ஒரு காரணம்தான் உண்டு—துப்பாக்கி முனையில்தான் நாகர்களைப் பணிய வைக்க முடியும் என்ற தவருன எண்ணம்!

"இந்த அசட்டுத் துணிச்சலின் காரணமாக நாகர்களின் அது கோஷ்டி எதையும் பார்க்கக்கூட சர்க்கார் மறுத்துவருகிறது; நாகர் தலைவன் பிசோவின் தலையைத் தருவோருக்கு ரூ. 5,000 பரிசு என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"அசாமில் நடக்கும் காங்கிரஸ் பத்திரிகையொன்று, 'ஆகாய விமானத்திலிருந்து குண்டுகள் வீசி, நாகர்களின் பூண்டையே அழித்துவிடுங்கள்'—என்று உபதேசம் செய்கிறது.

வெள்ளம்—புயல்—நில நடுக்கம் ஆகியவற்ருல் பாதிக்கப்பட்டவர்களுக்கு!

தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவி

புதுடில்லி, ஜூலை 24—

தேசிய நிவாரண நிதியிலிருந்து பிரதமர் நேரு கீழ்க்கண்ட தொகைகளை வெள்ளம், புயல், நிலநடுக்கம் ஆகியவற்ருல் பாதிக்கப்பட்டோருக்கு அனுப்பிவைத்திருக்கிருர் எனத் தெரியவருகிறது.

நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்காக ரூ. 50,000.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்காக—

பி. — முதன்மந்திரிக்கு		ரூ 50,000
பீகார்	,,	ரூ. 50,000
ஒரிசா	,,	ரூ. 25,000
அசாம்	,,	ரூ. 25,000
சென்னை	,,	ரூ. 15,000

சென்னைக்குத் தரப்பட்டுள்ள 15 ஆயிரத்தில் ரூ. 10,000 மலபாருக்காகவும், ரூ. 5,000 தென் கன்னடத்திற்காகவும் செலவிடப்படவேண்டுமென குறிக்கப்பட்டுள்ளதாம்.

இதுவன்றி, திரு-கொச்சி ஆலோசகருக்கு ரூ. 10,000 அனுப்பப்பட்டுள்ளதாம், திரு-கொச்சியில் வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமளிப்பதற்காக!

வடக்கு தொழிற்சாலை விரிவடைகிறது

1,300 இலட்சம் டாலர் செலவிடப்படுமாம்

டாடா இரும்பு—எஃகுத் தொழிற்சாலையை விரிவுபடுத்தவும், புதிய முறையில் திருத்தி அமைக்கவும் 1,300 இலட்சம் டாலர் செலவிடப்படுமெனத் தெரிகிறது.

இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை அமெரிக்க நிறுவனமொன்று ஏற்றுள்ளது. இவ்வேலை 1958-மே மாத வாக்கில் முடிவு பெறுமென்று கூறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 95 அதிகாரிகளும், 6,000 இந்தியர்களும் தேவைப்படுவர் என்று தெரிவித்துள்ளார்.

ஆம்பர் சர்க்கா திட்டம்

நடைமுறையைக் கவனிக்க தனி இலாகா?

புதுடில்லி, ஜூலை 24—

சர்க்கார் நியமித்த அம்பர் சர்க்கா ஆய்வுக் குழுவினர்; அம்பர் சர்க்கா திட்டத்தின் முன்னேற்றத்தைக் 'கூர்ந்து கவனிப்பதற்காக' சர்க்காரின் தனிப்பிரிவு ஒன்று நிறுவவேண்டுமென்பதாகச் சிபாரிசு செய்துள்ளதாம்.

இந்தக் குழுவின் அறிக்கை, மக்கள் சபையில் உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

நியமிக்கப்படும் தனிப்பிரிவில் 'அனுபவம்' வாய்ந்த பொருளாதார நிபுணர்கள், தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றவர்கள், குடிசைத் தொழில் நிர்வாகத் திறனுடையவர்கள் ஆகியோர் இடம்பெற வேண்டும் என்றும் குழு கூறியிருக்கிறதாம்.

அமெரிக்காவின் அணுகுண்டு பரிசோதனை

கடைசிகட்டம் முடிந்துவிட்டதாம்

வாஷிங்டன், ஜூலை 23—

அமெரிக்கா 1956-ம் ஆண்டிற்கான அணுகுண்டு பரிசோதனையின் கடைசிக்கட்டத்தை முடித்துவிட்டதாக அமெரிக்க அணுசக்தி கமிஷன் தற்காப்பு இலாகா இரண்டும், கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

கடந்த மே திங்களில் பசிபிக் சமுத்திரத்தில் துவங்கிய இந்த அணுகுண்டு சோதனைகள், எப்போது முடிந்தன—எத்தனை அணு, நீர்வளிக்குண்டுகள் வெடிக்கப்பட்டன என்பதற்கான விளக்கங்களை எல்லாம் அந்த அறிக்கை தரவில்லை; மாருக, 'நடைபெற்ற சோதனைகள் வெற்றியளித்தன' என்றுமட்டும் அந்த அறிக்கை தகவல் தந்திருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க.—மாணவர் கிளை
தேர்தல் நிதி அளிப்பு விழா

★

5—8—56 ஞாயிறு காலை 9 மணிக்கு

கோகலே மன்றத்தில்

★

அண்ணு

அவர்கள்

சொற்பொழிவாற்றுவார்

நன்கொடை: ரூ. 5, 3, 2

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வேலை தேடித் தந்தோருக்கே வேலையில்லாத் திண்டாட்டம்

நிறுவனங்கள் கைமாறுவதின் விளைவு

சென்னை, ஜூலை 24—

சென்னை, ஆந்திரா, மைசூர், திரு-கொச்சி, குடகு ஆகியவை அடங்கிய தென் பிரதேசத்தில் உள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்கள், வரும் நவம்பர் முதல்தேதி முதல், தொடர்புடைய மாநில சர்க்கார்களின் நிர்வாகத்திற்கு மாற்றிவிடப்படும் என்று தெரியவருகிறது.

இதன் விளைவாக, இந்த நிறுவனங்களில் ஆட்குறைப்புச் செய்யப்படும் என்றும், இவற்றில் பிறருக்கு வேலை தேடித்தரும் பணியிலிருந்தோர், அப்போது வேலையில்லாது திண்டாட வேண்டிவரும் என்றும் தெரியவருகிறது.

இந்த நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு, டில்லி சர்க்கார், அவர்களை வேலையிலிருந்து நீக்கி மூன்று மாத 'நோட்டீஸ்' பிறப்பித்துவிடுவர் என்றும் தெரியவருகிறது.

இப்போது இந்த நிறுவனங்களிலிருப்போர், டில்லி சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படும் சம்பள விகிதப்படி சம்பளம் பெற்று வருகின்றனர். இவை, மாநில சர்க்காரின் நிர்வாகத்தின்கீழ் வரும்போது, ஊழியர்கள், அந்தந்த சர்க்கார் தரும் சம்பள விகிதப்படி சம்பளம் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தால் மட்டுமே வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்படுவர் என்றும், ஆனுலும், இப்போது ஊழியர் பெற்றுவரும் மொத்தச் சம்பள அளவு குறைக்கப்பட மாட்டாது என்றும், மாநில—மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படும் சம்பள விகிதங்களிடையேயுள்ள விகிதாசாரக் குறைபாடு, 'சொந்தச் சம்பளம்' என்ற பெயரில் சில காலத்திற்குச் சரிக்கட்டித் தரப்படும் என்றும் தெரியவருகிறது.

துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

கால வரையறையின்றி ஒத்திவைப்பு

விசாகப்பட்டினம் துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்திருந்தனர்; ஆனுல், இப்போது அவர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தை காலவரையறையின்றி ஒத்தி வைத்துவிட்டனர் என்று தெரியவருகிறது.

சம்பள விகிதங்களை மாற்றியமைக்க வேண்டும்—வேலையிலிருந்து நீக்கப்பட்டதொரு தொழிலாளியை மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்பனபோன்ற கோரிக்கைகள் குறித்து, துறைமுக நிர்வாக அதிகாரிகளுடன் தொழிற் சங்கத் தலைவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே வேலை நிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம், ஏ.